**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 155/2022 PW1**

06.08.2025 **வா..சா.1 ரகுராமன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

இறந்து போன சத்தியநாராயண மூர்த்தி கொடுத்ததாக சொல்லப்படும் வழக்கு காசோலைகள் தொடர்ச்சியான வரிசை எண்களில் இல்லை என்றால் சரிதான். மேற்படி காசோலைகள் செக்யூரிக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாங்கிய பணத்திற்காக அவரால் கொடுக்கப்பட்டதாகும். சத்தியநாராயண மூர்த்தி உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி காசோலைகளை நான் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர் திடீரென இறப்பார் என நான் எதிர்பார்க்கவில்லை. அவர் தற்கொலை செய்து இறந்தார் என்றால் செய்தித்தாள்களில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டு இருந்தது. சத்தியநாராயண மூர்த்தி இறந்த பிறகு அவரது இறப்பிற்கு மட்டும் சென்றிருந்தேன் அதன் பிறகு பிரதிவாதிகளை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கடன் தொகை சம்மந்தமாக பிரதிவாதிகளிடம் இருந்து எந்த ஒப்புதலும் பெற்றேனா என்றால் இல்லை, ஆனால் கடன் சம்மந்தமாக அவர்களுக்கு தகவல் சொன்னேன். அவ்வாறு நான் அவர்களுக்கு தகவல் சொன்னபோது என்னுடன் 3ம் நபர்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. என்னைச் சார்ந்த நபர்களும் என்னுடன் யாரும் இல்லை. சத்தியநாராயண மூர்த்தி பணிபுரிந்த வங்கியில் பன்னீர் என்பவரும் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அதே வங்கியில் ஒரு பிரேம் குமார் என்பவர் Unofficial ஆக பணிபுரிந்தார் என்றால் சரியல்ல, அவர் அதே வங்கியில் முன்னாள் செயலாளராக இருந்தார். பன்னீர் மற்றும் பிரேம் குமார் மூலமாகத்தான் எனக்கு சத்தியநாராயண மூர்த்தி அறிமுகம் ஆனார் என்றால் பிரேம் குமார் மூலமாகத்தான் எனக்கு அறிமுகமானார். பிரேம் குமாரை சாட்சியாக வைத்து நான் சத்தியநாராயண மூர்த்தியிடம் பணம், பான்டு பத்திரம் மற்றும் காசோலை ஆகிய பணப்பரிவர்தனைகளை செய்தேனா என்றால் ஆம் செய்தேன். பாண்டு பத்திரத்தில் பிரேம் குமார் சாட்சி கையொப்பம் ஏதும் போட்டாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பம் சத்தியநாராயணமூர்த்தியுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 4 புரோ நோட்டுகளில் உள்ள வாசகங்களை வேறு ஒருவர் எழுதினார், சத்தியநாராயண மூர்த்தி கையொப்பம் மட்டும் போட்டார். இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் 3 வருட காலமாக பகுதி பகுதியாக கொடுத்தேன். நான் Income tax returns நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. Income tax returns ஆவணத்தை நான் என் வழக்கறிஞரிடமும் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1ல் கண்டுள்ள தொகையை பொருத்து மட்டும் தான் எனக்கும் சத்தியநாராயண மூர்த்திக்கும் நடுவே பணப்பரிவர்தனை நடந்தது என்றும், வா.சா.ஆ. 2 முதல் 7 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள தொகையை பொருத்து பணப்பரிவர்த்தனை ஏதும் நான் சொன்னது போல் எனக்கும் சத்தியநாராயண மூர்த்திக்கும் இடையே நடக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நான் எந்த ஒரு வட்டியையும் பிரதிவாதிகளிடம் இருந்து பெறவில்லை. வழக்கு புரோநோட்டுகள் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று கேட்டால் தெரியாது ஆனால் சத்தியநாராயண மூர்த்தி என் வீட்டில் வைத்து என்னிடம் கொடுத்தார். தொகைகளை சத்தியநாராயண மூர்த்திக்கு என் வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். 2 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை என் உறவினர்களை சாட்சியாக வைத்துக் கொண்டு நானாகவே ஜோடித்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீட்டை அபகரிக்கும் நோக்கில் நான் வழக்கின் தொகையை கூடுதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீடு சத்தியநாராயண மூர்த்தி பணிபுரிந்த வங்கியால் ஜப்தி செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வங்கியில் பணிபுரிந்த பன்னீர் மற்றும் பிரேம் குமார் ஆகியோர்கள் தான் சத்தியநாராயணமூர்த்திக்கு சொந்தமான வீடு சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் சட்ட விரோதமாக ஒப்படைத்தார்கள் என்றும், அதனை வைத்து நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரியான மறுபயன் இல்லாத ஆவணங்களை வைத்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.